அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது: திருக்குறள் (45)

# புதுத் தெம்புடன் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்





திரு ஐசெக்குடன் அவரது மனைவி திருமதி ரெபெக்கா, பிள்ளைகள் ரிவேஷா, 16, ராக்கேஷ், 15. **படம்: திமத்தி டேவிட்**

செய்தி: வில்சன் சைலஸ்

நம்பிக்கை நங்கூரமாக மனைவி. தந்தையின் சிரமம் அறிந்த பொறுப்பான பிள்ளைகள். துயரத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது தூக்கி நிறுத்திய அன்பான குடும்பத்துடன் கிறிஸ்துமஸ் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடுகிறார் 55 வயது திரு ஐசெக் கலைச்செல்வன்.

இஸ்தானாவில் விருந்து, அதிபருடன் சந்திப்பு போன்ற அரிய நிகழ்வுகளும் இவரது கொண்டாட்டத்திற்கு இவ்வாண்டு மேலும் சிறப்பு சேர்த்துள்ளன.

உடற்குறையுள்ளவர்களுக்குக் கைகொடுக்கும் 'ஏபல்' என்ற பொதுநல அமைப்பின் மூலம் பயன் அடைந்துள்ள திரு ஐசெக்குக்கு இஸ்தானாவில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் சவால் பாராட்டு விருந்தில் குடும்பத்துடன் கலந்துகொள்ள வாய்ப்பு கிட்டியது.

விளம்பரப் பதாகைகள், ஃபேஸ்புக்கில் காணொளி ஆகியவை மூலம் விடாமுயற்சிக்கு இலக்கணமாக அண்மையில் சித்திரிக்கப்பட்ட இவர், தற்போதைய நிலையை அடைவதற்கு உடலளவிலும் மனதளவிலும் கடந்து வந்த பாதை அத்தனை சுலபமாக இருக்கவில்லை.

இது ஒரு மறுபிறவி என்று சொல்லும் அளவுக்கு திரு ஐசெக்கின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டது பத்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அந்தத் துயரச் சம்பவம். இதே கிறிஸ்துமஸ் சமயம் எதிர்பாராத திருப்பங்கள் அவரின் வாழ்க்கையில் அப்போது ஏற்பட்டன.

### தலைகீழான வாழ்க்கை

நாட்கள் மாதங்களாயின. சுய நினைவின்றி மருத்துவமனையில் இருந்த திரு ஐசெக்கிற்கு 2007ஆம் ஆண்டு, ஜனவரி 21ஆம் தேதி அன்று மிஞ்சியது எல்லாம் விரக்தி, கோபம்.

வெகுநாட்கள் உறக்கத்தில் இருந்து 'எங்கே இருக்கிறேன்?, என்ன நடந்தது?' என்ற கேள்விகளுடன் கண் விழித்த அவரிடம் இடது கால் வெட்டி எடுக்கப்பட்டதை எப்படி சொல்வது எனக் கையைப் பிசைந்தார் அவரது மனைவி திருமதி ரெபேக்கா பார்வதி.

மாற்று இதய அறுவை சிகிச்சை நடந்து ஒரு வாரம் ஆகியுள்ள நிலையில் திரு ஐசெக்கின் காலில் ரத்த ஓட்டம் இல்லாததால் கிருமி தொற்றி அது அழுக தொடங்கியது. நீரிழிவும் சேர்ந்துகொண்டதால் இடது காலை உடனே வெட்டி எடுக்கவேண்டும் என்ற மருத்துவர்கள் அப்படி செய்யாவிடில் உயிருக்கு ஆபத்து எனவும் எச்சரித்தனர்.

"கால் போனால் பரவாயில்லை. உயிருடன் இருந்தால்போதும்," என்ற திருமதி ரெபெக்கா, தமது கணவரின் கால் துண்டிக்கப்பட ஒத்துக்கொண்டார்.

பேரதிர்ச்சியுடன் நிலைமையைப் புரிந்துகொண்ட திரு ஐசெக், 'உயிரோடு இருந்து என்ன பயன்?', 'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' எனக் கத்தினார், கதறினார். மனைவியிடமும் கோபத்தைக் கொட்டினார். இன்னும் பல கேள்விகள் இதயத்தைத் துளைக்க, வாழ்க்கையே முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு வந்த அவரிடம் அன்பையும் அக்கறையையும் பொழிந்து மனக்காயங்களுக்கு மருந்தானர் திருமதி ரெபெக்கா.

### பத்து ஆண்டுகளுக்கு முன்

2006ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம். நீரிழிவால் பாதிக்கப்பட்டிருந்த திரு ஐசெக் வழக்கமான பரிசோதனைகளுக்கு அங் மோ கியோ மருந்தகத்திற்கு சென்ற போது ரத்த அழுத்தம் சற்று அதிகமாக இருக்கிறது என்றார் மருத்துவர்.

மருத்துவ ஆலோசனைப்படி 'இசிஜி' எனும் இதயமின்னலை பரிசோதனையைச் செய்த போது பரிசோதனை முடிவுகள் சாதகமாக அமையவில்லை. இதய நிபுணரைச் சந்திக்கவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்த, ஆறு மாதங்களுக்குப் பிறகு திரு ஐசெக்கைச் சந்திக்க கைதேர்ந்த இதய நிபுணரும் தேதியைக் குறித்துவிட்டார்.

அதற்குள் அவரது வாழ்க்கையைத் திசை திருப்பியது 2006 நவம்பர் 25ஆம் தேதி. அடுத்தடுத்து அவருக்கு விழுந்த பேரிடிகள் அன்றிரவு ஏற்பட்ட ஒரு சாதாரண இருமலில் தொடங்கியது.

"அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தோம். திடீரென அதிகமாக இருமிய என் கணவருக்கு மூச்சுவிடுவது சிரமமானது. செய்வதறியாது ஆம்புலன்சில் உடனே அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்," என அன்று இரவு நடந்தவற்றை விவரித்தார் திரு ஐசெக்கின் மனைவி திருமதி ரெபெக்கா, 52.

ஆறு வயது மகளையும் ஐந்து வயது மகனையும் பணிப்பெண்ணின் கவனிப்பில் விட்டுவிட்டு ஆழ்ந்த குழப்பத்துடன் ஆம்புலன்சில் கணவருடன் டான் டொக் செங் மருத்துவமனைக்குச் சென்றார் அவர்.

"இப்போது நினைத்தாலும் மனம் பதைக்கிறது. மருத்துவமனைக்குப் போகின்ற வழியில் கணவரின் இதயத்துடிப்பு நின்றுவிட்டது," என சோகம் ததும்ப கூறிய திருமதி ரெபெக்கா.

"சுய நினைவு மங்கிய நிலையில் மற்றவர்கள் பேசுவது மட்டும் லேசாகக் கேட்டது. மருத்துவ கருவிகளைக் கொண்டு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கப்பட்டது," என்று அப்போது மனத்திரையில் நிழல்போல தோன்றின என்றார் திரு ஐசெக்.

கிட்டத்தட்ட 45 விநாடிகள் செயலழிந்த அவர் இதயத்தை மீண்டும் உயிர்ப்பித்தனர் ஆம்புலன்சில் இருந்த முதலுதவியாளர்கள்.

மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்ட திரு ஐசெக்கிற்கு தாமதமின்றி பரிசோதனைகள் செய்யப்பட்டதில் இதயத்துடன் இணைந்துள்ள மூன்று தமனிகளில் 80% வரை அடைப்புகள் இருந்தது கண்டறியப்பட்டது. 45 வயதான அவரின் இதயம் 80 வயதுடையவரின் இதயம் போல செயல்பட்டது என்று மருத்துவர்கள் கூறினர்.

தமனிகளில் உள்ள அடைப்பை நீக்கும் 'ஸ்டெண்ட்' எனும் கருவியின் மூலம் காப்பாற்றப்பட்ட திரு ஐசெக், மருத்துவர்களின் ஆலோசனைப்படி சிங்கப்பூர் பொது மருத்துவமனை சிகிச்சைக்குப் பின் உறவினர்களால் அழைத்து செல்லப்பட்டார்.

திரு ஐசெக்கிற்கு செய்யப்பட்ட முதல் அறுவை சிகிச்சையின் பலன் இரண்டு வாரங்கள் மட்டுமே தாக்குப்பிடித்தது. நிலைமை மீண்டும் மோசமடைய 'பையாஸ்' எனும் மாற்று வழி இணைப்பு அறுவை சிகிச்சை செய்யவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார்.

எனினும், இதய தசைகள் பலவீனமாக இருந்ததன் விளைவாக அந்த அறுவை சிகிச்சையும் இரண்டு வாரங்களுக்குப் பின் பலன் இழக்க மீண்டும் உயிருக்குப் போராடினார் திரு ஐசெக்.

'மாற்று இதயத்தைப் பொருத்த வேண்டும் அல்லது உயிர் காக்கும் இயந்திரத்தைதான் பயன்படுத்த வேண்டும்' எனத் திட்டவட்டமாகக் கூறினர் மருத்துவர்கள்.

சுய நினைவு இல்லாத கணவரை உயிருடன் பார்க்கவேண்டும் என்ற ஏக்கத்தில் சிறிதேனும் யோசிக்காமல் மாற்று இதய அறுவை சிகிச்சைக்குச் சம்மதித்த திருமதி ரெபெக்காவிற்கு ஓரிரு நாட்களில் நல்ல செய்தி வந்தது.

திரு ஐசெக்கிற்குப் பொருத்தமான இதயத்தைக் கண்டுபிடித்த மருத்துவர்கள் களத்தில் இறங்கினர். பத்து மருத்துவர்கள். 14 மணிநேரம் நீடித்த அறுவை சிகிச்சையில் வெற்றிகரமாகப் புது இதயம் பொருத்தப்பட்டது.

இருப்பினும், புது இதயத்தை உடல் ஏற்றுக்கொள்கிறதா? என மும்முரமாகக் கண்காணிக்கப்பட்ட திரு ஐசெக்கிடம் எந்த முன்னேற்றமும் இல்லை.

"அப்போதும் சுய நினைவு இல்லாத அவரின் வலதுகாலின் பெருவிரல் ஒரு சில நாட்களுக்குப் பிறகு அசைந்ததில் நம்பிக்கை பிறந்தது," என்றார் திருமதி ரெபெக்கா.

அப்போதுதான் திரு ஐசெக்கின் நலன் கருதி அவரது இடது கால் வெட்டி எடுக்கப்பட்டது. புது இதயத்தை ஓரிரு வாரங்களுக்குள் திரு ஐசெக்கின் உடல் முழுமையாக ஏற்றுக்கொண்டதால் அது ஆரோக்கியமாகவும் செயல்பட 2007 மார்ச் மாதம் அவர் வீடு திரும்ப மருத்துவர்கள் சம்மதித்தனர்.



> சுய நினைவு இல்லை. குரல்கள் மட்டும் லேசாக கேட்டன. மருத்துவ கருவிகளைக் கொண்டு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கப்பட்டது.
>
> மயக்கத்தில் நிழல்போல ஓடிய காட்சி பற்றி திரு ஐசெக்

படம்: திரு ஐசெக் கலைச்செல்வன்

## 'விழுந்த இடத்திலிருந்து எழுந்து ஓட உதவிய மனைவி'

கணக்கியல் உதவியாளராகப் பணியாற்றிய திரு ஐசெக்கிற்கு வேலை இல்லாமல் வீட்டில் இருக்கப்பிடிக்கவில்லை. "கால் இல்லை என்ற உண்மையை முழுமையாக ஏற்றுக்கொள்ளவே ஓராண்டு தேவைப்பட்டது," என்ற அவர், "பல இடங்களில் வேலைக்கு விண்ணப்பித்தும் பலன் இல்லை," என்றார்.

அப்போதுதான் மருத்துவ சமூக ஊழியரின் மூலம் 'ஏபல்' எனும் அமைப்பின் அறிமுகம் திரு ஐசெக்கிற்குக் கிடைத்தது.

உடற்குறையுள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் 'ஏபல்'இன் அரவணைப்பில் இழந்த வேலையைத் திரும்பப் பெற்றார் அவர்.

"திரு ஐசெக்கின் ஆர்வத்தைக் கண்டோம். அவருடன் சேர்ந்து மொத்தம் நான்கு பேருக்குக் கணக்கியல் தொடர்பான பயிற்சிகளை வழங்கினோம். சிறப்புத் தேர்ச்சி பெற்ற நால்வருமே இப்போது 'ஏபல்'இல் வேலை செய்து வருகின்றனர்," என்றார் 'ஏபல்' இன் மூத்த நிர்வாகி கெயில் டிராகன்.

'ஏபல்' அமைப்பு தமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டியதற்கு நன்றி கடன்பட்டிருப்பதாகக் கூறிய ஐசெக், விழுந்த இடத்திலிருந்து மறுபடியும் எழுந்து ஓடுவதற்கான தெம்பைத் தமது மனைவியே அளித்தார் என்று கண் கலங்கினார்.

### சுமைதாங்கியான மனைவி

மருத்துவமனையில் கணவரையும் வீட்டில் பிள்ளைகளையும் ஒரு சேர பார்த்துக்கொள்வது எளிதல்ல என்ற யதார்த்தத்தைப் புரிந்தவராக பேசிய அவர், சின்ன சின்ன விவகாரங்களுக்கு விவாகரத்தாகி பிரியும் தம்பதிகளின் மத்தியில் தமது மனைவி தமக்கு ஒரு தாயாகவும் இருந்ததாக வர்ணித்தார்.

ஆறுதல் வார்த்தைகளாலும் மன உறுதியாலும் தம்மை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி சென்ற மனைவி, குடிநுழைவு சோதனை சாவடி ஆணையத்தின் அதிகாரியாகப் பணியாற்றி குடும்பத்தை இழுத்துப் பிடித்தார் என்றார் திரு ஐசெக். அவரின் மூத்த மகள் 16 வயது ரிவேஷா, பேயி உயர்நிலைப் பள்ளியின் விரைவு நிலை மாணவி. 'ஓ' நிலை தேர்வு எழுதியுள்ள அவர், சிறப்பான தேர்ச்சி பெறுவார் என்ற தன்னம்பிக்கையுடன் அடுத்த ஆண்டு வெளியாகவுள்ள தேர்வு முடிவுகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்.

அதே பள்ளியில் வழக்க நிலை பிரிவில் 3ஆம் ஆண்டு பயிலும் திரு ஐசெக்கின் இளைய மகன் ராக்கேஷ், 15.

"குடும்பத்தின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டாலும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்திருக்கிறார் என் மனைவி," என்று பெருமையுடன் திரு ஐசெக் கூறினார். வீட்டில் முடங்கிக் கிடந்தது சற்று வருத்தம் அளித்தாலும் பிள்ளைகளுடன் நேரம் செலவிட முடிந்ததை எண்ணி மகிழ்கிறார் இவர்.

## உதவி தேவைப்படுவோருக்கு உதவிக்கரம்; உதவ முன்வரலாம்

உற்றார் உறவினர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பதைத் தவிர உதவி தேவைப்படுவோருக்குக் கை கொடுப்பதும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று என்பதை உறுதியாக நம்புகிறார் திரு ஐசெக்.

பிரசன்ன தேவாலயத்தின் உறுப்பினரான இவர், வசதி குறைந்தவர்களுக்கு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை முன்னிட்டு சமீபத்தில் நிதி உதவி செய்ததுடன் உடற்குறை உள்ளவர்களுக்கும் மூத்தோருக்கும் உதவும்படி தமது பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகிறார்.

உடல் குறையுள்ளவர்களை இதற்கு முன் பார்த்தால் பெரிதாக எந்த எண்ணமும் வரவில்லை என்ற திரு ஐசெக், சக்கர நாற்காலியில் செல்லும்போது முன் பின் தெரியாத ஒருவர் தமக்கு உதவி செய்ய முன் வருவது இனம் புரியாத மகிழ்ச்சியைத் தருகிறது என்றார்.

"என் தந்தை பெறுகிற அதே மகிழ்ச்சியை அடுத்தவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தயக்கமின்றி மூத்தோருக்கும் உதவி தேவைப்படுவோருக்கும் முன் சென்று உதவ உந்துசக்தியாக இருக்கிறது," என்றார் ரிவேஷா.

சிங்கப்பூரில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்துவ சமூக, சமுதாய பிரிவான 'கரிடாஸ் சிங்கப்பூர்' அமைப்புடன் கடந்த 2010ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது 'ஏபல்' எனும் அமைப்பு. அதே ஆண்டு டிசம்பர் தொடங்கி கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் வரைமாற்றுத்திறனாளிகளுக்கான திட்டத்தை அமைப்பு தொடங்கியது.

அதைத் தொடர்ந்து கடந்த 2015ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அகாப்பே வில்லேஜ்ஜில் இரண்டு நிலையங்களை அமைப்பு செயல்படுத்தி வருகிறது. இந்த அமைப் பின் மூலம் திரு ஐசெக் போன்ற 300க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

வேலையிட பயிற்சிகள், மறுவாழ்வு ஆகிய அம்சங்களில் அதிக முக்கியத்துவம் அளித்து வரும் 'ஏபல்'இன் உதவி பெற விரும்புவோர் 6801 7460 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது enquiries@able-sg.org என்ற முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பலாம்.